**<u>தேதி - 26.09.2022 அசல் வழக்கு எண்.221/2017 பி.சா.1 (மகாராஜன்)</u>**

**<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

பி.சா.ஆ.5 ஆன closer letter ல் nil balance எதுவும் இல்லை என்றும், பின்தொடர்ச்சி எதுவும் இல்லை என்றும் குறிப்பிட்டுக் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். வாதியின் கம்பெனிக்கு தொகைகள் எதுவும் கொடுக்க வேண்டியதிருந்தால் பி.சா.ஆ.5 ஆன வங்கி கணக்கில் கொடுக்க வேண்டாம் என்றும், தனிப்பட்ட முறையில் வாதியின் நிறுவனத்திற்கு காசோலையாக கொடுக்கும்படியும் எழுதிக் கொடுத்துள்ளனர். வாதி நிறுவனமானது எங்களுடைய வங்கிக்கும், வழக்கறிஞர் அனுப்பினர் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. அதறகு எங்களுடைய வங்கியானது அறிவிப்பை பெற்றக் கொண்டு பதில்அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லலை என்று சொன்னால்அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. கடன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடந்து கொள்ளாமல் நிபந்தனைகளை மீறி எங்களது வங்கியானது இயங்கியது என்று சொன்னால் சரியல்ல. எங்களுடைய வங்கியானது வாதி வண்டி பெற்றதற்குரிய invoice களை கொடுக்காமலும், வாதியின் முன்அனுமதி இன்றியும் 1, 2 பிரதிவாதிகளுக்கு பணத்தை விடுவித்துள்ளனர் என்றும் சொன்னால் சரியல்ல. ஒப்பந்தம் போடப்பட்டது. வாதி நிறுவனத்தில் இருந்து எங்களுடைய வங்கிக்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. வாதி நிறுவனமானது தன்னுடைய வங்கி கணக்கை freeze செய்த பிறகும், 1,2 பிரதிவாதிகளுக்கு வண்டியை விடுவித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வாதி நிறுவனத்திற்கு சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகள் அனைத்தும் எங்கள் வங்கி வசம் உள்ளது என்றும், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எங்கள் வழக்கிற்கும் விரோதமாக இரக்கும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களது வங்கியும், 1, 2 பிரதிவாதிகளும் கூட்டாக சேர்ந்து வாதி நிறுவனத்திற்கு கூட்டு சதி செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எங்களது வங்கியும், 1, 2 பிரதிவாதிகளும் கூட்டாக சேர்ந்து வாதி நிறுவனத்திற்கு கூட்டு சதியால் வாதி நிறுவனத்தில் இருந்து எங்களது வங்கிக்கு penal interest-ம் (அபராத தொகை) வாதி நிறுவனத்திற்கு இழப்பும் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதி நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பிற்கு 1, 2 பிரதிவாதிகளுடன் எங்களது வங்கியும் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வாதி நிறுவனத்தற்கு எதிராக கூறியுள்ள குற்றச்சாட்டுகள் பொய் என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.